**அக்டோபர் – 05**

# TNPSC துளிகள்

- ❖ இந்திய இராணுவத்தின் கிழக்குப் படைப் பிரிவின் ஸ்பியர் கார்ப்ஸ் பிரிவானது, கிழக்கு அருணாச்சலப் பிரதேசத்தில் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான ஆளில்லா விமானப் போர் மற்றும் ஆளில்லா விமான எதிர்ப்புத் தொழில்நுட்பங்களை மையமாகக் கொண்டு, போர் தயார்நிலையை வெளிப்படுத்துவதற்காக கவாச் பயிற்சியினை நடத்தியது.
- ❖ பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கடல்சார் அறிவியல் பேராசிரியரும் தலைவருமான R. ஆர்தர் ஜேம்ஸ், மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சபையிடமிருந்து சுற்றுச்சூழல் அறிவியல் பிரிவில் 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு அறிவியலாளர் விருதைப் பெற்றார்.
- ❖ மதியிறுக்க நரம்பியல் வளர்ச்சிக் கோளாறு (ASD) கொண்ட 17 வயது மாற்றுத் திறனாளி நீச்சல் வீராங்கனை ஜியா ராய், அமெரிக்காவில் 34 கிலோ மீட்டர் நீளத்திலான கேடலினா கணவாயை 15 மணி நேரத்தில் நீந்திக் கடந்த மதியிறுக்க நரம்பியல் வளர்ச்சிக் கோளாறு கொண்ட முதல் பெண்மணி என்றப் பெருமையினைப் பெற்றார்.
- ❖ மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள உலகச் சமூகப் பாதுகாப்பு மன்றத்தில் சமூகப் பாதுகாப்பில் மகத்தான சாதனைப் படைத்ததற்காக இந்தியாவிற்கு 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சமூக பாதுகாப்பு சங்க (ISSA) விருது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, 2024 ஆம் ஆண்டு சர்வதேச சுகாதார விதிமுறைகளில் (IHR) மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் பெருந்தொற்று அவசர நிலைக்கான புதிய வரையறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - ○ பெருந்தொற்று அவசரநிலை என்பது, பல்வேறு நாடுகளில் பரவி, சுகாதார அமைப்புகளில் பற்றாக்குறையினை ஏற்படுத்தி, விரைவான சர்வதேச நடவடிக்கை தேவைப்படும் ஒரு தொற்று நோயால் ஏற்படும் உலகளாவிய சுகாதார நெருக்கடியாகும்.
- ❖ ஃபோர்ப்ஸ் இதழின் நிகழ்நேர பில்லியனர்கள் கண்காணிப்பு அறிக்கையின் படி, எலோன் மஸ்க் 500 பில்லியன் டாலர் நிகர மதிப்பை எட்டியதுடன், இந்த மைல்கல்லை எட்டிய முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட நிதிகள்– தமிழ்நாடு

- ❖ மத்திய அரசானது, சமக்ர சிக்சா அபியான் (ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித் திட்டம்) மூலம் கல்வி உரிமை (இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம்) உரிமைகளின் கீழ் 538.39 கோடி ரூபாய் நிதியை தொடங்கியுள்ளது.
- ❖ இந்தத் தொகையில் 2024-25 ஆம் ஆண்டிற்கான 362 கோடி ரூபாயும், 2025-26 ஆம் ஆண்டிற்கான முதல் தவணையான 175.59 கோடி ரூபாயும் அடங்கும்.
- ❖ தனியார் பள்ளிகளில் தொடக்க நிலை வகுப்புகளில் 25% இடங்கள் ஆனது கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் விளிம்பு நிலையில் உள்ள குழுவினைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில், சமக்ர சிக்சா திட்டத்திலிருந்து RTE (கல்வி உரிமை) திட்டத்திற்கு நிதியளிப்பதைக் குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசுக்கு சென்னை

உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

❖ இதன் பின்னர், தமிழ்நாடு மாநில அரசானது உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிறப்பு விடுப்பு மனுவை (SLP) தாக்கல் செய்த நிலையில், உச்ச நீதிமன்றமானது மத்திய அரசு தனது நிதிப் பங்கை விடுவிக்கக் கோரி உத்தரவிட்டது.

**At a glance**

The fund allocation and disbursal by the Union government, and the State's share of funding under the Samagra Shiksha scheme

| Year | Proposed allocation | Actual disbursal | State's share |
|---|---|---|---|
| 2018-19 | 1,497.50 | 1,474.44 | 9,48.34 |
| 2019-20 | 1,801.73 | 1,769.12 | 1,114.48 |
| 2020-21 | 1,649.96 | 1,621.54 | 1,099.97 |
| 2021-22 | 1,649.96 | 1,598.82 | 1,099.97 |
| 2022-23 | 2,117.59 | 2,107.23 | 1,316.11 |
| 2023-24 | 2,090.76 | 1,871.96 | 1,393.84 |
| 2024-25 | 2,151.59 | - | 1,434.39 |

*Note: Unused funds for the year gets carried over*

Source: RTI reply, PAB minutes

## மூன்றாம் காலாண்டில் PE-VC முதலீடுகள்

**Rise and fall**

A look at the PE-VC and angel investments and deals secured by Tamil Nadu from 2023

**PE-VC INVESTMENTS IN COMPANIES BASED IN TAMIL NADU**

| Quarter | Number of Deals | Amount ($M) |
|---|---|---|
| Q3 2025 | 11 | 126 |
| Q2 2025 | 19 | 104 |
| Q1 2025 | 14 | 1,534 |
| Q4 2024 | 14 | 106 |
| Q3 2024 | 11 | 728 |
| Q2 2024 | 22 | 2,548 |
| Q1 2024 | 9 | 53 |
| Q4 2023 | 17 | 349 |
| Q3 2023 | 14 | 351 |
| Q2 2023 | 22 | 500 |
| Q1 2023 | 25 | 386 |

**ANGEL INVESTMENTS IN COMPANIES BASED IN TAMIL NADU**

| Quarter | Number of Deals |
|---|---|
| Q3 2025 | 6 |
| Q2 2025 | 11 |
| Q1 2025 | 9 |
| Q4 2024 | 10 |
| Q3 2024 | 11 |
| Q2 2024 | 13 |
| Q1 2024 | 12 |
| Q4 2023 | 9 |
| Q3 2023 | 16 |
| Q2 2023 | 23 |
| Q1 2023 | 28 |

Source: Venture Intelligence

❖ தமிழ்நாட்டில் தனியார் சம பங்கு மற்றும் துணிகர மூலதன முதலீடுகள் (PE-VC) ஆனது 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் கடுமையாகக் குறைந்தன.

❖ 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், 11 ஒப்பந்தங்களில் 728 மில்லியன் டாலராக

இருந்த முதலீடுகள் 11 ஒப்பந்தங்களில் 126 மில்லியன் டாலராகக் குறைந்தன.

- கோவை பழமுதிர் நிலையத்திற்கான வெஸ்ட்பிரிட்ஜ் கேபிட்டல் நிறுவனத்தின் 72 மில்லியன் டாலர் முதலீடானது இந்தக் காலாண்டின் மிகப்பெரிய ஒப்பந்தமாகும்.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் செல்வந்தர்களால் புத்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முதலீடுகள் (ஏஞ்சல் முதலீடுகள்) ஆறு ஆக மட்டுமே பதிவு செய்யப்பட்டன என்ற நிலையில் இது முந்தைய ஆண்டின் பதினொன்று என்ற எண்ணிக்கையிலிருந்து குறைந்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 100 ஆம் ஆண்டு நிறைவு




- ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 முதல் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 01 வரையில் பல்வேறு நிகழ்வுகளுடன் அதன் 100 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆணையமானது முதன்முதலில் 1926 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று இந்திய அரசு சட்டம் 1919 மற்றும் லீ ஆணையத்தின் பரிந்துரைகளின் கீழ் அமைக்கப் பட்டது.
- 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் படி, இது 1937 ஆம் ஆண்டில் கூட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையமாக மாறியது.
- இதற்கு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என மறுபெயரிடப்பட்டது.
- அரசியலமைப்பின் 315 முதல் 323 வரையிலான சரத்துகள், பாரபட்சமற்ற ஆட் சேர்ப்பிற்கான அரசியலமைப்பு சார் சுயாட்சியுடன் கூடிய ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையமாக இதை மாற்றியது.

## சுவச்த்தா ஹி சேவா - 2025 பிரச்சாரம்

- இந்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறையானது, சுவச்த்தா ஹி சேவா - 2025 என்ற பிரச்சாரத்தினை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று நிறைவு செய்தது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதி முதல் நடைபெற்ற இந்தப் பிரச்சாரத்தில், நாடு முழுவதும் உள்ள அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தூய்மை இயக்கங்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், மரம் நடுதல், கலாச்சார

நடவடிக்கைகள் மற்றும் நடைபயணங்கள் ஆகியவை அடங்கும்.

- மகாத்மா காந்தியின் 156வது பிறந்தநாளானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது என்பதோடு இது சுவச் பாரத் திவாஸ் என்றும் கொண்டாடப் படுகிறது.




## டிஜிட்டல் வானொலி ஒளிபரப்புக் கொள்கை




- தனியார் வானொலி ஒளிபரப்பாளர்களுக்கான டிஜிட்டல் வானொலி ஒளிபரப்புக் கொள்கையை உருவாக்குவது குறித்தப் பரிந்துரைகளை இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) வெளியிட்டது.
- இந்தக் கொள்கையானது டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய நான்கு 'A+' வகை நகரங்களையும், பெங்களூரு, ஐதராபாத் மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட ஒன்பது 'A' வகை நகரங்களையும் உள்ளடக்கியது.
- டிஜிட்டல் வழி வானொலிச் சேவைகள் ஆனது, ஒரு தொடர்முறை, மூன்று டிஜிட்டல் மற்றும் ஒரு தரவு தடத்தினை அனுமதிக்கின்ற ஒரே உள்ளடக்கத்தினைப் பல்வேறு

தளங்களில் ஒளிபரப்புதல் முறையில் செயல்படும்.

❖ இந்திய நாட்டிற்காக ஒரே அலைவரிசையில் ஒரே டிஜிட்டல் வானொலித் தொழில் நுட்பத்தை அரசாங்கம் தேர்ந்தெடுக்கும் என்பதோடு 2023 ஆம் ஆண்டு தொலைத் தொடர்பு சட்டத்தின் கீழ் ஏலம் மூலம் அலைவரிசைகளையும் ஒதுக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## தெற்கு நாடுகள் மற்றும் மும்மைய ஒத்துழைப்பு




❖ தெற்கு நாடுகள் மற்றும் மும்மைய ஒத்துழைப்பு (SSTC) ஆனது ஆண்டுதோறும் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப் படுகிறது.

❖ வளர்ந்து வரும் நாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட 1978 ஆம் ஆண்டு பியூனஸ் அயர்ஸ் செயல் திட்டத்தின் கீழ் SSTC நிறுவப்பட்டது.

❖ இந்திய-ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுக் கூட்டாண்மை நிதியம் மற்றும் இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் மூலம் SSTC கட்டமைப்பில் இந்தியா பங்கேற்கிறது.

❖ 47க்கும் மேற்பட்ட அரசாங்கங்கள் SSTC திட்டங்களுக்குப் பங்களித்துள்ளன என்ற நிலையில் இதனால் 155 நாடுகளில் உள்ள மக்கள் பயனடைகிறார்கள்.

❖ SSTC கட்டமைப்பின் கீழ் உள்ள 56 வளர்ந்து வரும் நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள 75 மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தியா நிதியளித்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த அறிக்கை 2023

❖ தேசியக் குற்ற ஆவணக் காப்பு வாரியத்தின் (NCRB) 2023 ஆம் ஆண்டிற்கான தரவானது, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 8% அதிகரிப்பையும், கடந்த மூன்று ஆண்டுகளில் 11% அதிகரிப்பையும் காட்டுகிறது.

- 19 பெருநகரங்களில் மிக அதிகமாக, டெல்லியில் பெண்களுக்கு எதிரான 13,366 குற்றங்களும், குழந்தைகளுக்கு எதிரான 7,731 குற்றங்களும், முதியோர்களுக்கு எதிரான 1,361 குற்றங்களும் பதிவாகியுள்ளன.
- டெல்லியில் கடத்தல் வழக்குகள் மொத்தம் 5,681 ஆக பதிவாகியுள்ளது என்ற நிலையில் இது தேசிய அளவில் மிக அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் டெல்லி தேசியத் தலைநகரப் பகுதியில் (NCT) 6,284 குழந்தைகள் காணாமல் போனதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் 6,972 பேர் மீட்கப்பட்டாலும், கண்டுபிடிக்கப்படாத குழந்தைகளின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 12,324 ஆக உயர்ந்துள்ளது.
- இந்த நகரம் இணையவெளிக் குற்ற வழக்குகளில் 10வது இடத்திலும், 4,580 வழக்குகளுடன் பொருளாதாரக் குற்றங்களில் நான்காவது இடத்திலும் உள்ளன என்ற நிலையில் இதில் 130 வழக்குகள் வெளிநாட்டினர் தொடர்பான குற்றங்கள் மற்றும் 117 வழக்குகள் மனிதக் கடத்தல் தொடர்பான குற்றங்கள் ஆகும்.
- டெல்லியில் 2,278 வழக்குகளில் சிறார்களும், அதைத் தொடர்ந்து சென்னையில் 523 வழக்குகளும், பெங்களூருவில் 427 வழக்குகளும் பதிவாகியுள்ளன.
- டெல்லியில் 2,278 குற்றங்களில் சிறார்கள் ஈடுபட்டுள்ளனர் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து சென்னையில் 523 வழக்குகளிலும், பெங்களூருவில் 427 வழக்குகளிலும் சிறார்கள் ஈடுபட்டுள்ளனர்.
- நாட்டில் அதிக எண்ணிக்கையிலான பாலியல் வன்கொடுமை மற்றும் பொருளாதார குற்ற வழக்குகள் இராஜஸ்தானில் பதிவாகியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் இராஜஸ்தானில் மொத்தம் 5,194 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளன.
- இராஜஸ்தானில் 27,765 பொருளாதாரக் குற்ற வழக்குகளும், அதைத் தொடர்ந்து தெலுங்கானா (26,881) மற்றும் உத்தரப் பிரதேசம் (23,428) ஆகியவற்றிலும் பதிவாகி உள்ளன.
- பெண்களுக்கு எதிரான மொத்தக் குற்றங்களில் முறையே 66,381 மற்றும் 47,101 வழக்குகளுடன் இராஜஸ்தானுக்கு அதற்கு அடுத்தபடியாக உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

**STATE-WISE CRIME DATA**

| | |
|---|---|
| **RAPE** | |
| Rajasthan | 5,194 |
| Uttar Pradesh | 3,556 |
| Madhya Pradesh | 2,979 |
| **ECONOMIC OFFENCES** | |
| Rajasthan | 27,765 |
| Telangana | 26,881 |
| Uttar Pradesh | 23,428 |
| **CRIMES AGAINST WOMEN** | |
| Uttar Pradesh | 66,381 |
| Maharashtra | 47,101 |
| Rajasthan | 45,450 |

## SC/ST பிரிவினருக்கு எதிரான குற்றங்கள் 2023





- தேசியக் குற்ற ஆவணக் காப்பக வாரியமானது (NCRB) பெருநகரங்களில் சாதி அடிப்படையிலான குற்றங்களில் அதிகபட்ச அதிகரிப்பைக் காட்டுகின்ற 'இந்தியாவில் குற்றம் 2023' என்ற அறிக்கையை வெளியிட்டது.
- ஜெய்ப்பூரில் 2021 ஆம் ஆண்டில் 361 ஆக இருந்த பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு (SCs) எதிரான குற்றங்கள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 489 ஆக 35% அதிகரித்துள்ளதாகவும், பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு (ST) எதிரான குற்றங்கள் 155 என்ற எண்ணிக்கையிலிருந்து 228 ஆக 47% அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
- பெங்களூருவில் 2021 ஆம் ஆண்டில் 166 ஆக இருந்த பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான குற்றங்கள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 285 ஆகப் பதிவாகியுள்ளன என்ற நிலையில் ST பிரிவினருக்கு எதிராக 15 குற்றங்கள் அங்கு பதிவாகியுள்ளதுடன், பெரு நகரங்களுள் இந்த நகரம் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் பெருநகரங்களில், ஜெய்ப்பூரில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான இரண்டாவது அதிகபட்ச வழக்குகளும், பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு எதிரான அதிக வழக்குகளும் இருந்தன.
- லக்னோவில் 2023 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான 517 குற்றங்கள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் அங்கு இருந்த எண்ணிக்கையை விட 93% அதிகம் ஆகும்.
- மேலும் ஜெய்ப்பூர் (1,231), லக்னோ (1,205), கான்பூர் (804), மற்றும் பெங்களூரு (682) ஆகிய இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் அதிக ஒட்டுமொத்த வழக்குகள் பதிவாகி உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## நறுமணப் பொருட்கள் வர்த்தக வழித்தடச் சுற்றுலா வட்டாரங்கள் - கேரளா


- கேரள மாநிலமானது 10 தனித்துவமான நறுமணப் பொருட்கள் வழித்தடம் சார்ந்த சுற்றுலா வட்டாரங்களை உருவாக்க உள்ளது.
- இந்த நறுமணப் பொருட்கள் மற்றும் துறைமுக அடிப்படையிலான பாதைகள் ஆனது கேரளாவில் உள்ள பண்டையத் துறைமுகங்கள் மற்றும் முக்கியமான பாரம்பரிய இடங்களை இணைப்பதன் மூலம் உருவாக்கப்படும்.
- ஒரு பாரம்பரிய தகவல் சார் அருங்காட்சியகமும் அமைக்கப்படும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஜேன் குடால் மறைவு

- முன்னோடியான விலங்கினவியலாளரும் வனவிலங்கு ஆர்வலருமான ஜேன் குடால் சமீபத்தில் காலமானார்.
- அவர் லண்டனில் பிறந்து அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இறந்தார்.
- சிம்பான்சிகளின் பண்புகள், சமூக நடத்தை மற்றும் கருவிப் பயன்பாட்டைக் கவனிப்பதன் மூலம் அவை பற்றிய ஆய்வில் புரட்சியை ஏற்படுத்தினார்.
- உலகளவில் வளங்காப்பு, ஆராய்ச்சி மற்றும் அவை குறித்த கல்வியை ஆதரிப்பதற்காக குடால் 1977 ஆம் ஆண்டில் ஜேன் குடால் நிறுவனத்தை நிறுவினார்.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான அவரது பங்களிப்புகளுக்காக வேண்டி 2025 ஆம் ஆண்டில் U.S. Presidential Medal of Freedom பதக்கம் உட்பட ஏராளமான விருதுகளைப் பெற்றார்.



# முக்கிய தினங்கள்


## உலக விலங்கு நல தினம் 2025 - அக்டோபர் 04




- இந்த ஆண்டு இத்தினமானது விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் வளங்காப்பினை மையமாகக் கொண்ட 1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்தினக் கொண்டாட்டங்களின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கிறது.
- விலங்குகளின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 1931 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் தேதியன்று இந்த நாள் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.
- இது விலங்குகளைக் கொடுமைப் படுத்துதலுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கையை ஊக்குவித்தல், பொறுப்பான செல்லப்பிராணி உரிமத்தினை ஊக்குவித்தல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "Save Animals, Save the Planet" என்ற 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவானது விலங்கு நலனுக்கும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகிறது.

## உலக ஆசிரியர் தினம் 2025 - அக்டோபர் 05

- இத்தினமானது, 1994 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (UNESCO) நிறுவப்பட்டது.
- இது ஆசிரியர்களின் நிலை குறித்த 1966 ஆம் ஆண்டு UNESCO/ILO பரிந்துரையை ஏற்றுக் கொண்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இது ஆசிரியர்களைப் பாராட்டுவதையும், அவர்களின் உரிமைகள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும், அனைவருக்கும் தரமான கல்வியை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Recasting Teaching as a Collaborative Profession" என்பதாகும்.


5 October
WORLD
TEACHER`S
DAY